www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**வகுப்பு : 11**

1 1 3 0 1 1

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு – 2024

நேரம் : 1.30 மணி]

## வரலாறு

[மொத்த மதிப்பெண்கள் : 50

பகுதி–I

I சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக. 10X1 = 10

1. ------ சங்கம வம்சத்தின் சிறந்த ஆட்சியாளராக கருதப்படுகிறார்.
   அ) முதலாம் தேவராயர் ஆ) இரண்டாம் தேவராயர்
   இ) கிருஷ்ண தேவராயர் ஈ) வீர நரசிம்மர்
2. பொருத்துக.
   (i) அப்துல் ரசாக் – 1. ரஷ்யா
   (ii) நிகிடின் – 2. சாளுவ நாயக்கர்
   (iii) டோமிங்கோ போயஸ் – 3. பாரசீகம்
   (iv) செல்லப்பா – 4. போர்த்துகல்
   அ) 1, 2, 3, 4 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 1, 4, 3 ஈ) 3, 1, 4, 2
3. அத்வைதம் என்னும் தத்துவத்தை இந்து மதத்திற்கு வழங்கியவர்
   அ) ஆதிசங்கரர் ஆ) இராமானுஜர் இ) இராமானந்தர் ஈ) சைதன்யா
4. சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.
   அ) தனது தொடக்க கால வாழ்வில் சைவராக இருந்த அப்பர் தனது தமக்கையால் சைவ மதத்திலிருந்து சமண மதத்திற்கு மாறினார்.
   ஆ) சூஃபி இயக்கத்தவர் கடவுளை அழகின் உச்சமாகக் கருதினர்.
   இ) இராம பக்தியை முன்னிலைப்படுத்தி வங்காள வைணவர்கள் இந்து மதத்தைச் சீர்திருத்த முயன்றனர்.
   ஈ) பௌத்த மத நூல்களில் ரவிதாசின் பக்திப்பாடல்கள் இணைக்கப்பட்டுள்ளன.
5. கப்பலின் ஒட்டகம் எனச் சொல்லப்படும் தொழில்நுட்பத்தை உலகத்திலேயே கண்டறிந்த முதல் அரசர்
   அ) அக்பர் ஆ) ஷாஜகான் இ) ஷெர்ஷா ஈ) பாபர்
6. கூற்று : பாபர் முதலாம் பானிபட் போரில் வெற்றி பெற்றார்.
   காரணம் : பாபர் பீரங்கிப் படையை போரில் பயன்படுத்தினார்.
   அ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கமாகும்.
   ஆ) கூற்று தவறு, காரணம் சரி
   இ) கூற்று தவறு, காரணமும் தவறு
   ஈ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல
7. சிவாஜியின் ஆலோசனை சபை ----- என்று அழைக்கப்பட்டது.
   அ) அஷ்டபிரதானம் ஆ) அஷ்டதிக்ககங்கள் இ) நவரத்தினங்கள் ஈ) பஞ்சபாண்டவர்கள்
8. சிவாஜியின் ஆட்சிக்குப் பிறகு வந்தவர்களை காலவரிசைப்படி எழுதுக.
   அ) சாம்பாஜி, சாஹீ, ராஜாராம், இரண்டாம் சாம்பாஜி
   ஆ) சாம்பாஜி, ராஜாராம், சாஹீ, இரண்டாம் சாம்பாஜி
   இ) ராஜாராம், சாம்பாஜி, சாஹீ, இரண்டாம் சாம்பாஜி
   ஈ) சாம்பாஜி, இரண்டாம் சாம்பாஜி, ராஜாராம், சாஹீ,
9. நிலநீர்க் கொள்கையுடன் தொடர்புடையவர்
   அ) பிரான்சிஸ்கோ டி அல்மைடா ஆ) அல்போன்ஸ்ஸோ டி அல்புகர்க்
   இ) நீனோ டா குன்கா ஈ) ஆன்டோனியா டி நாரான்கா
10. கீழ்க்கண்டவற்றுள் எது தவறாக பொருத்தப்பட்டுள்ளது.
   அ) தரங்கம்பாடி – டேனியர்
   ஆ) சர் தாமஸ் ரோ – பிரெஞ்சுக்காரர்
   இ) அன்வாருதீன் – ஆற்காடு நவாப்
   ஈ) அல்புகர்க் – போர்த்துகீசியர்



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி –II

II. ஏதேனும் 4 வினாக்களுக்கு குறுகிய விடையளிக்கவும்.

வினா எண் 17–க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4x2=8

11. பாமினி விஜயநகர அரசுகளிடையே பகைமை ஏற்பட்டதற்கான மூன்று முக்கிய காரணங்கள் யாவை?

12. இராமானந்தரின் போதனைகள் யாவை?

13. பாபர் இந்தியாவின் மீது படையெடுக்க தூண்டியது எது?

14. சிறு குறிப்பு வரைக. அ) வில்லியம் ஹாக்கின்ஸ் ஆ) சர் தாமஸ் ரோ

15. தாராபாய் பற்றி சிறுகுறிப்பு வரைக.

16. நாயக்க அரசுகள் யாவை? அவை நிறுவப்பட காரணம் என்ன?

17. ஆளுநர் தாமஸ் மன்றோ பற்றி சிறுகுறிப்பு வரைக.

## பகுதி – III

III. ஏதேனும் 4 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடை தருக.

வினா எண் 24க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4x3=12

18. கிருஷ்ண தேவராயர் விஜயநகர அரசின் சிறந்த ஆட்சியாளராக போற்றப்படக் காரணம் யாவை?

19. பக்தி இயக்கத்தின் விளைவுகளை சுட்டிக்காட்டுக.

20. "வாழ்க்கை முழுவதும் தவறி விழுந்த ஹுமாயூன் வாழ்க்கையை விட்டே தவறி விழுந்து இறந்தார்" – விவரி.

21. அக்பரது மன்சப்தாரி முறை.

22. ராஜா தேசிங்கின் வீரதீர செயல்கள்.

23. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு.

24. வாரிசு இழப்பு கொள்கை.

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 4x5=20

25. அ) நவீன கல்விமுறைக்கு இரண்டாம் சரபோஜியின் பங்கினை விளக்குக.

(அல்லது)

ஆ) முகமது கவானின் ஆட்சிமுறை மற்றும் ராணுவ நிர்வாகம் பற்றி விவரி.

26 அ) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக.

(அல்லது)

ஆ) முகலாய கட்டிடக்கலையின் சிறப்பம்சங்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

27. அ) பாபருடன் தொடர்புடைய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தை காலக்கோட்டில் அமைக்கவும்.

(அல்லது)

ஆ) வங்காளத்தின் உண்மையான ஆட்சியாளர்களாக ஆங்கிலேயர் எவ்வாறு? எப்போது மாறினர்.

28. அ) வெல்லெசுலி அறிமுகப்படுத்திய துணைப்படைத் திட்டத்தினை பற்றி விவரி.

(அல்லது)

ஆ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களை குறிக்கவும்.

அ) சூரத் ஆ) பூனா இ) ஹைதராபாத் ஈ) வேலூர் உ) தஞ்சாவூர்



Scanned with CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com